REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெ[illegible]செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

**தி. மு. க. பெற்றுள்ள வெற்றி**

(7—3—57 நண்பகல்வரை)

★

| சட்டசபை: | மக்கள் சபை: |
|---|---|
| 2 | 1 |

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

| சட்டசபை: | மக்கள் சபை: |
|---|---|
| 1,63,346 | 1,08,028 |

• மலர் 4] சென்னை: மாசி 24உ வியாழன் (7—3—57) ★ ★ வெளியூர்: மாசி 25உ வெள்ளி (8—3—57) [இதழ் 231

# சேலத்திலிருந்து அண்ணா காஞ்சி விரைந்தார்

## வாக்கு எண்ணும் வேலை தொடருகிறது

## வெற்றிச் செய்தி கேட்க இந்தியா முழுவதும் ஆவல்

சென்னை, மார்ச் 7—

பொதுச்செயலாளர் தொகுதியான சேலத்தில், வாக்குப்பதிவைக் காணச் சென்றிருந்த அண்ணா அவர்கள், இன்று காலை 10-30 மணியளவில் காஞ்சிக்கு விரைந்துள்ளார்.

இன்று காஞ்சியில், அண்ணா அவர்கள் தொகுதியில் கடந்த 4-ந் தேதியன்று தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்படுகின்றன.

காலை 8 மணியளவில் வாக்கு எண்ணுவது துவங்கியுள்ளது; தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அண்ணா அவர்களின் வெற்றிச் செய்தியைக் கேட்க இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஆவல் காட்டிவருகிறது.

*பம்பாய், அகமதாபாத் நகரங்களிலிருந்தும், இலங்கையிலிருந்தும், தமிழ் நாட்டின் பல்வேறு நகரங்களிலிருந்தும் அண்ணா அவர்களின் வெற்றிச் செய்தியை அறிவிக்குமாறு கேட்டு எண்ணற்ற 'டிரங் டெலிபோன்'கள் வந்துகொண்டிருக்கின்றன.*

*சென்னை நகரில் உள்ள தோழர்களும், பத்திரிகையாளர்களும் நமது 'நம் நாடு' டெலிபோனுக்கு ஓய்வே தருவதில்லை.*

பகல் 1 மணிக்குக் கிடைத்த தகவலின்படி, அண்ணா அவர்கள் காங்கிரஸ் அபேட்சகரைவிட 8,000 ஓட்டுகள்வரை அதிகம் பெற்றுள்ளார் என்றும், தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன என்றும் தெரியவருகிறது.

காஞ்சியிலிருந்து கிடைக்கும் செய்திகள், அண்ணா அவர்களின் வெற்றியில் சந்தேகமே இல்லை என்று கூறுகின்றன. அதிகாரபூர்வமான முடிவு இரவு எதிர்பார்க்கப்படுகிறது.

## அண்ணா

### மகத்தான வெற்றி!

அண்ணா அவர்கள் மகத்தான வெற்றி பெற்றார் என்ற செய்தி இன்னும் சில மணி நேரத்தில் தரப்பட்டுவிடும்.

பகல் 2-30 மணி வரை அண்ணா அவர்கள் 15,538 ஓட்டுகள் பெற்றுள்ளார். அவரை எதிர்க்கும் ஸ்ரீநிவாசன் 9090 வாக்குகளே பெற்றுள்ளார். இன்னும் பாதி வாக்குகள் எண்ணியாக வேண்டும்.

## ப. உ. சண்முகம், சி. சந்தானம் வெற்றி நிச்சயம்

### திருவண்ணாமலையில் தேர்தல் நிலவரம்

*திருவண்ணாமலை சட்டசபை இரட்டை மெம்பர் தொகுதியில்தோழர் ப. உ. சண்முகம் அவர்களும், சி. சந்தானம் அவர்களும் வெற்றிபெறுவது நிச்சயம்.*

*தோழர் சண்முகம் அவர்கள் 13,000 வாக்குகளும், சி. சந்தானம் அவர்கள் 8,000 வாக்குகளும் காங்கிரஸ் அபேட்சகர்களைவிட அதிகமாகப் பெற்றுள்ளனர்—பகல் 12-மணிவரை கிடைத்துள்ள தகவல்களின்படி! எனவே, இவர்கள் இருவரின் வெற்றி நிச்சயம் என்று நமது நிருபர் அறிவித்திருக்கிறார்.*

*முடிவுகள், இன்று இரவு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.*

### நெறிமுறை தவறிய தொழில் சட்ட விரோதமாகும்!

டோக்கியோ, மார்ச் 6—

*இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து சப்பானில் விபசாரம் நடத்துவது சட்ட விரோதமாகும்; எனினும், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் 60,000 பெண்களின் நலனுக்காகவும் சீரமைப்பிற்காகவும் வேண்டிய எவ்வித நடவடிக்கைகளும் இன்னும் எடுக்கப்படவில்லை.*

# 'நேர்மையான தேர்தல்' என்ற உறுதிமொழி என்ன ஆயிற்று?

## வாக்குகளை எண்ணுவதில் அசாதாரணமான தாமதம் ஏன்?

## வேண்டுமென்றே முடிவுகளை அறிவிக்க காலந்தாழ்த்துவது எதற்காக?

சென்னை, மார்ச் 7—

முதல் தேதி வாக்குப் பதிவு நடைபெற்ற தொகுதிகளில் இன்னும் வாக்குகளை எண்ணும் வேலை முடியக்காணோம். 4-ந் தேதி தேர்தல் நடைபெற்ற தொகுதிகளுக்கு வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுவருகின்றன.

ஆனால், முதல் தேதி தேர்தல் நடைபெற்ற தொகுதிகளில் எதிர்க்கட்சியினர்—குறிப்பாகத் தி. மு. கழக அபேட்சகர்கள் வெற்றி பெறுவது நிச்சயம் என்று தெரிந்துள்ள தொகுதிகளில் வாக்குகளை எண்ணுவதில் அதிகாரிகள் அசாதாரணமான காலதாமதம் காட்டுகின்றனர் என்று தெரியவருகிறது.

*கடந்த 5-ந் தேதி பகல், திருவண்ணாமலை சட்டசபைத் தொகுதியில் பதிவான வாக்குகளை எண்ணத் துவங்கினர்; இன்று பகல் 12-மணி வரையிலும் அவை முடிந்தபாடில்லை; இதுவரை எண்ணப்பட்டுள்ளதில் சுமார் 15,000 ஓட்டுகள் தி. மு. க. அபேட்சகரான ப. உ. சண்முகம் அவர்களுக்கு காங்கிரஸ் அபேட்சகரைவிட அதிகம் கிடைத்திருக்கிறது; எனவே, அவருக்கு வெற்றி நிச்சயம் என்று தெரிவதால், முடிவுகளை அறிவிப்பதால் ஏற்படும் விளைவுகள் காங்கிரசுக்கு பாதகமாயிருக்கும் என்று கருதி, முடிவுகளைத் துரிதமாக அறிவிக்காமல் காலங்கடத்துவதற்காக அதிகாரிகள், தங்களிஷ்டம்போல வேண்டுமென்றே வாக்குகளை எண்ணுவதில் தாமதம் காட்டுகின்றனர் என்று நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.*

*இதைப்போலவே, தேனி தொகுதியிலும், வாக்குகளை எண்ணுவதில் அதிகாரிகள் அசாதாரணமான தாமதம் காட்டுவதாகத் தெரியவருகிறது.*

*'நேர்மையான தேர்தல்' என்று உறுதிமொழி தந்த தேர்தல் கமிஷன், இந்த அநீதிகளுக்கு — பாரபட்சங்களுக்கு என்ன விளக்கம் தரப்போகிறதோ?*

### அணு விஞ்ஞானிகள் சாதனை

ஹாம்பர்க், மார்ச் 6—

*குறைந்த வெப்பத்துடன் நீர்வாயு அணு இணைவதைப் பற்றிய இரகசியத்தை செர்மன் அணு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.*

## நிதி மந்திரி சி. சுப்பிரமணியத்தின் அரசியல் ஞானம்!

### 3-கோடி மக்கள் கொண்ட தமிழ் நாடு தனித்து வாழ முடியாதாம்!

சேலம், மார்ச் 5—

*3 கோடி தமிழ் மக்கள் தனித்து வாழ முடியாதாம் —நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறினாராம்!*

*ஏனெனில், தமிழ்நாட்டில் 3 கோடி பேர்தான் வாழுகின்றனராம்! தமிழ்நாடு மிகச் சிறியதாம்!*

*எனவே, சுதந்திரமாகத் தனித்து வாழ முடியாதாம் தமிழ்நாடு!*

*ஆகவே இந்தியாவைத் துண்டாடக்கூடாதாம்!*

*"ஆஸ்திரியா, ஹங்கேரி, போலந்து, செக்கோஸ்லவேகியா போன்ற ஐரோப்பாவில் உள்ள சின்னஞ்சிறு நாடுகளுக்கு அண்மையில் நேர்ந்த கதி நமக்கெல்லாம் ஒரு எச்சரிக்கையாகும்" என்றும் இந்த மாமேதை கூறினாராம்!*

*இந்தியா பெரியநாடு என்று பெருமை பெற்றிருப்பதால் தான் அன்னியர் இந்தியாவில் தொழில்கள் வளர உதவுகின்றனராம்!*

*"எனவே, சிறிய நாடாகத் தமிழ்நாடு இருக்குமாதலால் சுதந்திரமாக வாழமுடியாது" என்றும் அவர் கூறியுள்ளாராம்!*

### சிறையில் அல்சீரியத் தலைவர் தற்கொலை?

அல்சீரியா, மார்ச் 5—

*பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்குப் போராடி வரும் அல்ஜீரிய சுதந்திர இயக்கத் தலைவரான பென் மெகிதி லாப்ரி என்பவர் சென்ற வாரம் பாரிசில் போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டார்.*

*சிறையில் அவர், தனது சட்டையைக் கிழித்துக் கயிறாகத் திரித்து அதைக் கொண்டு தூக்கிட்டுக் கொண்டார் என்று இப்போது போலீசார் அறிவித்திருக்கின்றனராம்.*

### 267 பேர் பலி!

அல்சீரியா, மார்ச் 4—

*அல்சீரியாவில் இவ்வார இறுதியில் 267 கிளர்ச்சிக்காரர்களைப் பாதுகாப்புப் படையினர் கொன்றனர் என்றும், 478 பேர்களைக் கைது செய்தனர் என்றும் தகவல் வந்திருக்கிறதாம்.*

### உங்களுக்குத் தெரியுமா?

*முதலாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் இந்தியாவில் பாதைகளின் மொத்த நீளம் 2,48,509 மைலாக இருந்தது, திட்டக் கடைசியில் 3,16,668 மைலாக அதிகரித்துவிட்டதாம்.*

## சென்னைத் தோழர்களுக்கு:

அண்ணா அவர்களுடையவும், ப. உ. சண்முகம், எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியவர்களுடையவும் தொகுதிகளில் பதிவாகியுள்ள வாக்குகள் எண்ணுவதுதொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இலட்சியப் போராட்டங்களில் அதிகாரிகளால் நமக்குத் தரப்பட்ட பல தொல்லைகளைப்போன்றே, இவ்வாக்குப் பதிவு எண்ணிக்கையின் அறிவிப்பிலும் நமக்குப் பல இடையூறுகள் தோன்றும் நிலை ஏற்பட்டிருக்கிறது; தேர்தல் அதிகாரிகளின் விசித்திரப் போக்கு, இதை உறுதி செய்வனவாக இருக்கிறது.

ஆகவே, சென்னைத் தோழர்கள் ஆவேச உணர்ச்சிகளுக்கு இடம் ஏற்படுத்திக் கொள்ளாதவகையில் அண்ணா தொகுதியைப் பற்றிய முடிவு வரையிலாவது சூழ்நிலையை அறிந்து தெளிவுறுவதற்கு நாளை (8-3-57) காலையில், 'நம் நாடு' தனி இதழ் தருவதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. அரையணா விலையில் தரப்படும் அவ்விதழில், பல முக்கிய விளக்கங்கள் தரப்படவிருப்பதால், சென்னைத் தோழர்கள் தங்கள் பிரதிக்கு ஏற்பாடு செய்து கொள்ளுமாறு கோருகிறோம்.

—நிர்வாகி,
'நம் நாடு'

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 7—3—57 வியாழன்

# 'வெற்றி பெற்றேயாகவேண்டும்'

வெற்றி பெற்றேயாக வேண்டும் என்ற வெறியுணர்ச்சியோடு சட்ட விரோதமான குற்றங்களையும் துணிந்து புரிந்து தில்லுமுல்லுகளைத் தாராளமாகச் செய்து தேர்தலில் வெற்றியைத் தேடப் புறப்படுவோர், வெற்றி பெற்றாலும் மகிழ முடியாது; இத்தனைக்கும் பிறகு தோல்வி ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்ளமுடியாது.

காங்கிரசார், இன்று தேர்தல் என்பது நாட்டு மக்கள் சுதந்திரமாகச் சிந்தித்துத் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதற்கான ஒரு ஏற்பாடு என்பதை மறந்து, நாம் குறிப்பிட்டபடி வெற்றி பெற்றேயாக வேண்டும் என்ற வெறியுணர்ச்சியோடு தேர்தலில் ஈடுபடுகிறார்கள் என்ற உண்மை அவர்களாலேயே ஒப்புக்கொள்ளப் பட்டதாகும்.

மக்களின் இதயத்திலிருந்து காங்கிரஸ் அகன்றுவிட்டது என்ற உண்மை நிலை அவர்களுக்கு மற்றெவரையும்விடத் தெளிவாகத் தெரிந்தே இருக்கிறது. என்றாலும், ஆட்சிப் பீடத்தில் தாங்களே தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற பதவிப் பேராசையால், தேர்தலின் புனிதமான நோக்கத்திற்கு மனமறிந்து துரோகம் இழைத்துவிட்டுத் தேர்தல் விதிமுறைகளை மீறுவது, பணம் தந்து வாக்குகளை விலைக்கு வாங்குவது போன்ற அநாகரீகமான செயல்களில் ஈடுபடுகின்றனர்; இந்தத் தேர்தலிலும் அந்த இழி செயல்களையே, தங்களின், 'வெற்றி பெற்றேயாக வேண்டும்' என்ற வெறியைத் தணிக்கும் மாமருந்தாகக் கொண்டிருக்கின்றனர் என்பதை நேர்மையான அரசியல் பார்வையாளர்களால் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும். இந்த நிலை ஏற்பட்டிருப்பது, காங்கிரசின் சரிவு துரிதமாகி வருகிறது என்பதற்கு துலாம்பரமான எடுத்துக்காட்டாகும்.

தேர்தலில், நேர்மையான உள்ளத்தோடும் நேரிய நடைமுறையுடனும் ஈடுபட முடியாதவர்கள், தேர்தலின் முடிவுகளால் மகிழ்ச்சிகொள்ள முடியாது என்பது ஒருபுறமிருக்க தேர்தல் என்றாலே பணம்தான் பிரதானம் என்ற ஒரு கேவலமான—ஆபத்தான சம்பிரதாயத்தை நிலைநாட்டுவதினால், தேர்தல் மூலம் அரசு நிறுவுவது என்ற முறைக்கும், அந்த அரசு முறையினால் வாழ்வுபெற வேண்டிய மக்களுக்குப் பெரும் தீங்கினைச் செய்கிறார்கள் —துரோகம் இழைக்கிறார்கள்.

இப்படி 'சனநாயக'த்தைக் கேலிக்குரியதாக்கும் போக்கு, நெடிய எதிர்காலத்திற்குத் தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்த உதவும் என்று கருதுவது பேதமையாகும். மேலும் இந்தப்போக்கு, அதனை மேற்கொள்பவர்களைத்தான் முதல் பலியாக்கிக் கொள்ளும் என்பதும் வரலாறு காட்டும் பாடமாகும்.

இந்தத் தற்கொலைப் போக்கில்தான் காங்கிரஸ் இன்று சென்று கொண்டிருக்கிறது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேர்தலில், செய்யக்கூடாத தண்டனைக்குரிய குற்றங்கள் அத்தனையையும் நெஞ்சாரப் புரிந்து வருகின்றனர் காங்கிரசார் என்பதை வாக்குப் பதிவு தினத்தன்றே வாக்குச் சாவடிகளுக்கு முன்பாகவே ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுவது, அமைதியைக் கெடுப்பது, வாக்காளரை அச்சுறுத்துவது, வாக்குப் பதிவை மந்தமாக்க முயற்சிப்பது என்பன போன்ற போக்கினை அவர்கள் பல தொகுதிகளிலும் கையாண்டு வருகிறார்கள் என்பதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறதல்லவா ?

இந்த இழிவான — சட்ட விரோதமான — தற்கொலைக்கு ஒப்பான போக்கின் மூலம் தற்காலிக வெற்றியைப் பெற்றுவிட்டால் வேகமாக விழிப்புணர்வு பெற்றுவரும் மக்களிடம் இழந்துவிட்ட மதிப்பை காங்கிரஸ் மீண்டும் பெற்றுவிடும் என்று காங்கிரசார் கருதுகிறார்களா? சரிந்துவரும் காங்கிரசை, இந்தப் போக்கு முட்டுக்கொடுத்துக் காப்பாற்றலாம் எனக் கனவு காண்கிறார்களா? அப்படித்தான் என்றால், தாங்கமுடியாத ஏமாற்றத்தை அவர்கள் வருந்தி அழைக்கிறார்கள் என எச்சரிக்க விரும்புகிறோம்.

காங்கிரசின் இந்தப் போக்கு, சனநாயகத்தில், அதன் வளர்ச்சியில் இருக்க வேண்டிய அக்கரை, கவலை சிறிதும் அந்தக் கட்சிக்காரர்களுக்கு இல்லை என்ற உண்மையை உரம் செய்யவும்தான் பயன்படுகிறது. சனநாயக வளர்ச்சியில் இதர கட்சிகளுக்கு எல்லாம் வழிகாட்டக்கூடிய முன் மாதிரியான முறையில் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளவேண்டிய பொறுப்புடைய காங்கிரஸ் சனநாயகத்தையே கேலிக்குரியதாக்கி, அந்த அரசு முறைக்கே குழிபறிக்கும் போக்கில் சென்று தனது பதவிவெறி, சுயநலம் போன்ற கல்யாண குணவிசேஷங்களுக்கு 'இலக்கியம்' படைப்பதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால் காங்கிரசின் இந்தப்போக்கு, சனநாயகத்தின் வளர்ச்சிக்கு—பாதுகாப்பிற்கு ஊறுதேடுவதைப்பற்றி நாம் கவலைப்படாமலிருக்க முடியாது ; மக்கள் இந்தப்போக்கை இன்னும் எத்தனை காலத்திற்கு அனுமதிக்கப் போகிறார்கள் என்பதில்தான் அவர்களது பாதுகாப்புக்கான சனநாயக அரசுமுறை உரம் பெறுவது அமையமுடியும். காங்கிரசின் இந்தப் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மேலும், மார்ச் 6-ந் தேதி வாக்குப் பதிவு நடைபெறும் ஒரு மாநில மந்திரியின் தொகுதியில் 20-ந் தேதி தான் வாக்குகள் எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் கமிஷன் தந்த உறுதிமொழிகளுக்கு முற்றிலும் விரோதமானதாக உள்ளது இந்தஅறிவிப்பு. மேலும் எதிர்க்கட்சி—குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயம் வெற்றிபெறும் என்ற வாய்ப்புடைய தொகுதிகளில் வாக்கு எண்ணுவதிலும், முடிவுகளை அறிவிப்பதிலும் அசாதாரணமான காலதாமதம் காட்டப்படுவதாகவும் நமக்குத் தகவல்கள் கிடைக்கின்றன. தேர்தல் அதிகாரிகளின் இந்தப் போக்கு, 'நேர்மையான தேர்தல்' என்ற உறுதி மொழிகள் எல்லாம் 'வெறும் பகட்டு; உலகத்தை ஏமாற்றும் கண்கட்டி வித்தை,' என்ற குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கவும், தேர்தல் அதிகாரிகள் பாரபட்சமாகவே நடந்துகொண்டனர் என்ற குற்றச்சாட்டைக் கிளப்பவும் பயன்படும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

மேலும் அதிகாரிகளின் இந்தப்போக்கு காங்கிரசின் சட்ட விரோதப் போக்கிற்கு உதவுவதாகும் என்பதால் அவர்கள், விழிப்புற்ற மக்களின் கடுங் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்றும் எச்சரிக்க விரும்புகிறோம்.

தில்லுமுல்லுகள் செய்தும் விதிகளை மீறியும் வெற்றிபெற நினைக்கும் காங்கிரசாரின் தீய போக்கிற்கும் அதற்குத் துணைபோகும் அதிகாரிகளது போக்கிற்கும் எதிராக மக்களின் கவனத்தைத் திருப்பி அவர்களுக்குத் தெளிவூட்டுவதின்மூலம், சனநாயகத்தைக் காப்பாற்ற தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட்டுள்ள முயற்சி உடனடியாக இல்லாவிட்டாலும் சிக்கிரம் வெற்றிபெற்றேயாகவேண்டும்-வெற்றி பெற்றே தீரும் என்று திடமாக நம்புகிறோம்.

## இந்தியாவில் தொழில் துறைத் தகராறுகள்

"1956 டிசம்பர் மாதத்தில் புதிதாக 78 தகராறுகள் ஏற்பட்டன. இவற்றில் மொத்தம் 35,880 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். சென்ற மாதம் புதிதாக ஏற்பட்ட 83-தகராறுகளில் மொத்தம் 29,938 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்," என்று செய்தி அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

இந்த மாதத்தில் மொத்தம் 101 தகராறுகள் நீடித்துவந்தன. இவற்றில் மொத்தம் 50,000-தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். முந்திய மாதத்தில் நீடித்துவந்த 111 தகராறுகளில் மொத்தம் 48,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இந்தமாதம் ஏற்பட்ட தகராறுகளில் 10 தகராறுகள் கதவடைப்புகள் காரணமாக ஏற்பட்டவையாகும். இவற்றின் மொத்தம் சுமார் 11,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். இவை காரணமாக ஏறக்குறைய 2 இலட்சம் நபர் - நாட்கள் நஷ்டமாயின.

## காங்கிரசின் சமதர்ம இலட்சணம்!

பொதுத் தேர்தலில் வாக்குப் பதிவு நிலையங்களில் பணியாற்றுவதற்கு பள்ளி ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரல்லவா?

பள்ளி ஆசிரியர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2 'படி' செலவாகத் தரப்படுகிறது.

ஆனால், அதே பணியில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 10 'படி' செலவாகத்தரப்படுகிறது!

இந்தப் பாரபட்சப்போக்கினை விளக்கி பல கடிதங்கள் நாள்தோறும் தினசரி இதழ்களில் வெளியாகின்றன. இதுதான் ஆவடி சோஷலிச சாம்பிள் போலும்!

# நகர வாக்காளர்களுக்கு எம்.ஜி. ராமச்சந்திரன் வேண்டுகோள்

## சென்னையில் புரட்சி நடிகரின் மின்னல்வேகத் தேர்தல் பிரச்சாரம்

சென்னை, மார்ச் 6—

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், நேற்று மாலை 6 மணிக்குத் துவங்கி நடுஇரவு 2 மணிவரையிலும் சென்னை நகரத் தொகுதிகளில் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து சுமார் 8 பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அரிய கருத்துரைகளை வழங்கியுள்ளார்.

புரட்சி நடிகர் அவர்களின் வருகைக்காக ஒவ்வொரு கூட்டத்திலும் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் இரவு 1 மணி, 2 மணிவரை ஆனபோதிலும்கூட கொட்டும் பனியையும், குளிரையும்கூடக் கருதாது ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் காத்திருந்து தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் வந்ததும், நீண்ட கையொலி ஆரவாரம் செய்து அவரை வரவேற்றனர்.

புரட்சி நடிகர் அவர்கள் நிகழ்த்தின சொற்பொழிவுகள், உறங்கிக்கிடந்த ஒவ்வொரு உள்ளத்தையும் தட்டியெழுப்பும் வண்ணம் அமைந்திருந்தன.

### கோடம்பாக்கம் :

நேற்று மாலை 6½ மணியளவில் இங்கு நடைபெற்ற மாபெரும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், கழக அபேட்சகர்களை ஆதரித்து கழகத்தின் கொள்கைகள் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அக்கூட்டத்தில் நமது துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் அ. பொன்னம்பலனார், பி. ஆர். கோகுலகிருட்டிணன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

### ஆயிரம்விளக்கு:

பின்னர், இரவு 8¼ மணியளவில் ஆயிரம்விளக்குத் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் மக்கள் இயக்கமான கழகத்தையும், அதன் சார்பில் நிற்கும் அபேட்சகர்களையும் ஆதரிக்க வேண்டிய பொது மக்கள் கடமை குறித்து விரிவுரையாற்றினார், மற்றும் பலரும் பேசினர்.

### திருவல்லிக்கேணி :

அடுத்து, இரவு 9 மணியளவில் திருவல்லிக்கேணியில் நடைபெற்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு, கழகத்தின் இலட்சியங்களை எடுத்துக்கூறி அரிய கருத்து விளக்கம் தந்தார்.

### எழும்பூர்:

நான்காவதாக, இரவு 9-15 மணிக்கு எழும்பூர் கூட்டத்தில் கலந்து கொண்டார். தோழர் எம். ஜி. ஆர். அவர்களும் மற்றும் பல தோழர்களும் கழக அபேட்சகர்களை ஆதரித்து வெற்றி தேடித்தருமாறு கேட்டுக்கொண்டனர்.

### பெரம்பூர் :

பின்னர் இரவு 10-10 மணிக்கு பெரம்பூர் தொகுதி அயனாவரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் புரட்சி நடிகர் அவர்கள் கலந்துகொண்டு அரியதோர் உரை நிகழ்த்தினார்கள்.

### பேசின்பிரிட்ஜ் :

அடுத்து, இரவு 11-15 மணிக்கு பேசின்பிரிட்ஜ் தொகுதியைச் சேர்ந்த ஆதியப்பநாயக்கர் தெருவில் நடைபெற்றக் கூட்டத்தில் கலந்துகொண்டார். தேர்தலில் பொதுமக்கள் கடமை குறித்து அரிய விளக்கம் தந்தார்.

### வண்ணாரப்பேட்டை :

பின்னர், இரவு 12½ மணியளவில் வண்ணைத் தொகுதியில் நடைபெற்றக் கூட்டத்தில் கலந்துகொண்டார். வண்ணைத் தொகுதிக் கூட்டம் நடைபெற்ற இடம் கடற்கரையை அடுத்திருந்ததால் குளிர்ந்த காற்று அடித்து, கூடியிருந்த மக்கள் அனைவரும் உடல் நடுங்கிக்கொண்டிருந்தபோதிலும்கூட அந்நடுநிசியிலும்கூட எம்.ஜி.ஆர். அவர்கள் வந்ததும் பேராரவாரம் செய்து வரவேற்று இறுதிவரை அவரது கருத்துக்களைக் கேட்டு விளக்கம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

### பெத்துநாய்க்கன்பேட்டை :

இறுதியாக, பெத்துநாய்க்கன் பேட்டையில் நடைபெற்றக் கூட்டத்தில் இரவு 7 மணிக்கு கலந்துகொண்டார். கூட்டம் இரவு 2 மணி அளவில் முடிவுற்றது. அதுவரையிலும் கூடியிருந்த திரளான மக்கள், ஆர்வம் குன்றாமல் அமைதியாக இருந்து அவரது கருத்துரைகளைக் கேட்டு மகிழ்ச்சி பொங்க வீடு திரும்பினர்.

ஒரே இரவில் 8 கூட்டங்களிலும் கலந்துகொண்ட புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், இரவு 2 மணியளவில் மிக்க மகிழ்ச்சியுடன் தமது இல்லம் புறப்பட்டார். (ந. நி.)

ஆள் நடமாட்டமற்ற இடத்தில்

## வாக்குப்பதிவு நிலையம்

ஒரே ஓட்டு பதிவாயிற்றும் !

செலவு ரூ. 700!

டெஸ்பூர், மார்ச் 6—

இமாலய மலைப் பகுதியான பலிபுரா தொகுதியில் ஒரு வாக்குப் பதிவு நிலையத்தில் நாள் முழுவதும் ஒரே ஓட்டு பதிவாகியுள்ளது.

மாலை நேரம்; குடில் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஆடு மேய்ப்பவனொருவன் வாக்குப் பதிவு நிலையத்தில் நுழைந்து தன் வாக்கைப் பதிவு செய்தானாம்!

அந்த நிலையத்தை அமைக்கவும், அங்கு பணியாற்றிய ஏழு ஊழியர்களுக்குமாக மொத்தம் ரூ. 700 அரசாங்கத்திற்குச் செலவாகியுள்ளது.

இந்த அவல நிலைக்கு காரணம் வாக்குப் பதிவு நிலையம் ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் அமைத்ததேயாகும்.

## விசித்திரமான முடிவு ?

அனந்தப்பூர், மார்ச் 5—

உரசிண்டலா என்னும் இடத்தில் அமைக்கப்பட்ட வாக்குப் பதிவு நிலையத்தில் வாக்குப் பதிவு செய்ய ஒருவர்கூட செல்லவில்லையாம்!

வாக்குப் பெட்டிகளைக் காலியாகவே அதிகாரிகள் எடுத்துச் சென்றனராம்.

இதற்குக் காரணம்தான் என்ன ?

கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை பிடிக்கவில்லை; ஆகவே கம்யூனிஸ்டு அபேட்சகருக்கு வாக்களிக்க விரும்பவில்லையாம்!

பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் சாலை அமைத்துதர மறுத்து வந்துள்ளதாம்; ஆகவே, காங்கிரசுக்கும் வாக்கு அளிக்கவில்லையாம்!

★★★★★★★★★★★★★★★★★★

ஏற்றத்தாழ்வற்ற சாதிகளற்ற சமுதாயம் காண போராடும்

**தி. மு. க.**

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

# காங்கிரசின் சர்வாதிகாரம் தடுக்கப்பட வேண்டும்

## சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு வேண்டும்

### தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து எம். இரத்தினசாமி, ஏ. கிருஷ்ணசாமி கருத்துரை

"தென்னாட்டின் வளர்ச்சியில் ஆளும் கட்சியினர் அக்கரை காட்டவில்லை — அலட்சியப் படுத்தியே வந்திருக்கின்றனர்," என்று, சென்னையில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

தி. மு. கழக அபேட்சகர்களையே வாக்காளர் ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட அவர், வாக்காளர்கள் தங்களுக்குத் தரப்படும் சில தெளிவற்ற உறுதி மொழிகளைக் கண்டு மயங்கிவிடக் கூடாது என்றும், அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கையில் அவர்களது கடந்த காலச் சேவைகளை எண்ணிப் பார்த்து வாக்களிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"சமுதாயத்திலுள்ள சிறுபான்மை வகுப்பினருடைய பிரச்சினைகளையும் கவனித்து பராமரித்துப் பாதுகாக்க வேண்டும்; ஆனால் இன்றைய அரசாங்கத்தில் சிறுபான்மையினர் பாதுகாக்கப் படவில்லை; எனவே, சிறுபான்மையினர், இனிமேலேனும் தங்கள் நலன்களைக் கருதி தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரிக்கவேண்டும்," என்றார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு எம். இரத்தினசாமி அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :—

"மத்திய சர்க்காரிலும் மாநில சர்க்காரிலும் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையாக இன்று இருந்து வருவதால்தான் நாட்டின் உண்மையான நிலைமைகளைக் கண்டறிய முன்வராமல் இருக்கிறது. இதன் மூலம் காங்கிரஸ் ஒரு சர்வாதிகாரம் படைத்த கொடிய இயக்கம் என்பது வெளிப்படையாக நமக்குத் தெரிந்துவிட்டது.

"எனவே, பெரும்பான்மை பலம் கொண்டிருப்பதனால் சர்வாதிகாரப் பாதையில் சென்று கொண்டிருக்கும் காங்கிரசின் பலத்தைக் குறைத்தாக வேண்டியது மக்கள் கடமையாகும்; எனவே, இத்தகைய சர்வாதிகாரத்தை முறியடிக்க நல்லதோர் எதிர்க்கட்சி தேவைப் படுவதால், தி. மு. கழகத்தை மக்கள் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

# புதியவகை பிளாஸ்டிக் உருவாகிவிட்டதாம்!

## அலுமினியத்தைவிட இலேசானதாம்— எஃகைவிட உறுதியானதாம்!

இரஷ்யப் பிளாஸ்டிக் ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் இரு புதிய பிளாஸ்டிக் வகைகளை உருவாக்கியுள்ளனர். ஒன்றின் பெயர் கண்ணாடி—பைப்ரேட்;மற்றொன்றின் பெயர் கண்ணாடி—டெக்ஸ்டோலைட். இவை இப்பொழுது பிரபலமடைந்துள்ள 'டெக்ஸ்டோலைட்'டைப்போன்று உள்ளன. ஆனால் ஒரு வித்தியாசம் என்னவெனில், இவை பஞ்சு இழைகளுக்குப் பதில் கண்ணாடி இழைகளால் ஆனவை; அலுமினியத்தைவிட இரண்டு மடங்கு இலேசானவை. எஃகைவிட எந்த விதத்திலும் குறைந்த உறுதியுடையவை அல்ல.

இப்புதியவகை பிளாஸ்டிக்கை வளையக்கூடிய நார்களைப்போலவும், இயந்திர பாகங்களை உற்பத்தி செய்வதற்கு இலாயக்கான—உறுதியான பெரிய உலோகக் கட்டிகளாகவும் உற்பத்தி செய்ய முடியும்.

படகுகள் மோட்டார் கப்பல்கள் வீடுகள் கட்டுவதற்கு இவை பயன் படுத்தப்படும்.

தண்ணீரைவிட 20 மடங்கு இலேசானதும், மரத்தைப்போல உறுதியானதுமான புதியவகை நுன் துளை பிளாஸ்டிக்குகளை உருவாக்குவதற்கு விஞ்ஞானிகள் இப்போது முயற்சித்து வருகின்றனர். தொழில் நுட்பத் துறையிலும், விளையாட்டுச் சாமான்கள், படுத்துறங்குவதற்கான மெத்தைகள், அலங்கரிக்கப்பட்ட மேஜை நாற்காலி முதலிய பொருள்களின் உற்பத்திக்கும் இந்தப் புதியவகை பிளாஸ்டிக்குகள், விரிந்த அளவில் பயன் படுத்தப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★

'ஒன்றேகுலம் ஒருவனேதேவன்' என்றநிலை மலரப் பாடுபடும்

**தி. மு. க.**

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

# காஷ்மீர் எதிர்ப்பு இயக்கமாம்

கராச்சி, மார்ச் 4—

'காஷ்மீர் எதிர்ப்பு இயக்கம்' என்றப் பெயரில் ஒரு அமைப்பினை நிறுவி எதிர்ப்பு இயக்கம் நடத்த அகில மலைப் பகுதி மக்கள் நடவடிக்கைக் குழு ஒன்று கூடியுள்ளதாகவும், காஷ்மீர் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றி, போராட்டங்களில் ஈடுபடும் மக்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தருமாறு கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாகவும், 'டான்' இதழ் செய்தி ஒன்றினை வெளியிட்டுள்ளதாம்!

மேலும், ஆயிரக்கணக்கான மலைப்பகுதிவாழ் மக்கள் ஆயுத பாணிகளாக பெஷாவரில் கூடுவர் என்றும், அவர்களெல்லாம் காஷ்மீருக்குள் நுழைவார்கள் என்றும், அதனை பெஷாவர் டிவிஷன் கமிஷனர் கண் காணித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள மேற்படி குழுவின் உறுப்பினர்கள் அவரைச் சந்திப்பதெனவும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டுள்ளதென்றும் அவ்விதழ் மேலும் கூறியிருக்கிறதாம்.

## கோவையில் தானிய ஆராய்ச்சி நிலையமாம்!

சோளம், புஞ்சைத் தானியங்கள் ஆராய்ச்சி நிலையமொன்றை சென்னை சர்க்காரும் மத்திய சர்க்காரும் சேர்ந்து கோவையில் ஆரம்பிக்கக்கூடுமாம்.

# ரூ. 40 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ள சிமெண்டுத் தொழில்

## 30,000தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனராம் !

### நாட்டின் பல பகுதிகளிலும் தொழிற்சாலைகள் விரிவடையும் ?

புதுடில்லி, மார்ச் 5—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சிமெண்டு உற்பத்தி ஒரு கோடி டன்னுக்கு மேல் அதிகப்படுமாம்! இப்போது ஆண்டிற்கு 60 இலட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்வதற்கு இந்தியத் தொழிற்சாலைகளுக்கு வசதி இருக்கிறதாம்; இரண்டாவது திட்ட இறுதியில் 160 இலட்சம் டன் உற்பத்தி செய்ய முடியுமாம்.

இந்தியாவில் இப்போது மொத்தம் 28 சிமெண்டுத் தொழிற்சாலைகள் இருக்கின்றன ; அவைகளில், உத்தரப் பிரதேச சர்க்காருக்கும் மைசூர் சர்க்காருக்கும் சொந்தமானவை 2. மற்றவை தனி நபர்கள் தொழிற்சாலைகள்.

1960-ம் ஆண்டில் 64 தொழிற்சாலைகள் ஏற்பட்டுவிடுமென்றும், அவைகள் நாட்டின் பல பகுதிகளிலுமாக இருக்குமென்றும் டில்லி சர்க்கார் செய்தி ஒன்று கூறுகிறது.

புதிதாக ஏற்படுத்தப்படுகிற தொழிற்சாலைகளில் 56 இலட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்யலாமாம்.

சிமெண்டுத் தொழிற்சாலையில் சுமார் 30,000 தொழிலாளர்கள் நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்கள். சுமார் ரூ. 40 கோடி இத்தொழிலில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

சாதாரண சுண்ணாம்பிலிருந்து சிமெண்டு தயாரிப்பது தவிர, கிளிஞ்சல்கள், இரசாயனக் கழிவுப் பொருள் முதலிய மாற்றுப் பொருள்களும் உபயோகத்துக்குக் கொண்டுவரப்படும். வெள்ளை சிமெண்டு, வர்ண சிமெண்டு முதலியவைகளைத் தயாரிப்பதற்கான பல யோசனைத் திட்டங்களும் இருக்கின்றனவாம்.

எரிமலைச் சாம்பல் போன்ற பொருள்களைப் பயன்படுத்தியும் சிமெண்டு தயாரிக்க ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுவருகின்றன. ஜிப்ஸம் நீங்கலான இதர இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தியும் சிமெண்டு தயாரிப்பது பற்றியும் ஆராயப்படுகிறதாம்.

## விஞ்ஞானக் கருவி உற்பத்தித் தொழிற்சாலை

சென்னை, மார்ச் 5—

உஷ்ணமானிகள்,பிளாஸ்குகள் கண்ணாடிக் குழாய்கள், மூக்குப் பாத்திரங்கள் முதலிய விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த சென்னை அரசாங்கம் உத்தேசித்துள்ளதாம் !

ரூ. 8½ இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்படும் இந்தத் திட்டத்திற்கு டில்லிப் பேரரசு ரூ. 6,31,000 கடனாகத் தந்துள்ளதாம்.

# எழுதப் படிக்கத் தெரியாதவர்களே கிடையாதாம்!

## மக்கள் கல்வி வசதி பெறுவதில் ஆட்சியினர் கவனம்

சோவியத் ரஷ்யாவில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே கிடையாதென்றும், நூற்றுக்கு நூறு பேர் படித்தவர்களென்றும், கட்டாய ஏழாண்டுக் காலக் கல்வி ஏற்கனவே அமுலுக்கு வந்துவிட்டதென்றும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

2,13,000 பொதுக் கல்விப் பள்ளிகளும், சுமார் 4,000 உயர் நிலைக் கல்வி நிலையங்களும் இயங்கி வருகின்றனவென்றும், 1955—56-ம் ஆண்டில் மொத்தம் 3½ கோடி மாணவர்கள் பயின்றனரென்றும் கூறப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் மட்டும் 2,84,000 மாணவர்கள் படிப்பதற்கு இடமளிக்கும் 800 புதிய பள்ளிகள் அரசாங்க செலவில் நிறுவப்பட்டனவென்றும், 1956—60-ம் ஆண்டுகளில் நாடு முழுமையிலும்—நகரங்களிலும் கிராமங்களிலும், சுமார் 40 இலட்சம் மாணவர்கள் படிப்பதற்குவேண்டிய பள்ளிகளை அரசாங்க செலவில் கட்டுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளதென்றும் தகவல் தரப் பட்டிருக்கிறது.

உயர்நிலைக் கல்வியை முழு அளவில் பெற முடியாதுபோன இளம் உழைப்பாளி மக்கள் உயர் நிலைக் கல்வி பெறுவதற்கு சகல வாய்ப்புகளும் உள்ளனவென்றும், தமது வேலைகளைத் தொடர்ந்து செய்துகொண்டே இளம் தொழிலாளிகளும் விவசாயிகளும் மாலை நேரப் பள்ளிகளில் சேர்ந்து படிக்கின்றனரென்றும், பரீட்சை நேரத்தில் சம்பளத்துடன் மூன்று வாரங்களுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறதென்றும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

# சர்க்கார் அதிகாரிகளிடை லஞ்சப் பழக்கம்

புதுடில்லி, மார்ச் 6—

அதிகாரபூர்வமான முறையில் கடமையாற்றும் ஒரு அதிகாரி, கிரிமினல் குற்றங்கள் ஏற்படும் வகையில் ஒழுக்கக்கேடான அல்லது தவறான முறைகளில் நடந்து கொண்டால் அது குற்றமாகக் கருதப்படும் என்று கூறும் விதி ஒன்றும், அதுபோலவே அதிகாரி ஒருவர் தனது சராசரி வருமானத்திற்குத் தகுந்த அளவிற்கும் அதிகமாகப் பொருள் வைத்திருந்து, அச்சொத்து தன்னிடமிருப்பதற்கான சரியான விளக்கம் தரமுடியாமல் இருந்தால் அவருக்கு நீதிமன்றம் தண்டனை தரத்தக்க வகையில் சாட்சிய விதி ஒன்றும் இப்போது 1947ம் வருட இலஞ்சத் தடைச் சட்டம் 5-வது பிரிவில் ஒரு புதிய விதியை இந்திய சர்க்கார் உள்நாட்டு விவகார இலாகா உருவாக்கியிருக்கிறது.

இந்த விதியை நிரந்தர விதியாக்கிவிட இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

முன்னர், இவ்விதி 3 வருடத்திற்கே அமுலாகும் என்று வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது சர்க்கார் துறையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இலஞ்சப் பழக்கத்தில் ஈடுபட்டிருப்பதைத் தடுப்பதற்கு இவ்வகைச் சட்டம் பெரிதும் உதவும்—அதற்கு இது ஒரு நல்ல ஆயுதம் என்று கருதுவதாலேயே, சர்க்கார் இம்முடிவை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிகிறது.

# அரசாங்கத் துணி விற்பனை நிலையத்தில்!

## ரூ. 17,000 கையாடல்

கோத்ராவில் அரசாங்கம் நடத்திவரும் துணி விற்பனை நிலையத்தின் நிர்வாகியாக இருந்த நவரத்னலால் மான்சுக்லால் ஷா, இரண்டாண்டு காலத்தில் ரூ. 17,000 கையாடிவிட்டதாகத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை முடிவடைந்துவிட்டது. அவருக்கு 18 மாதம் சிறைத் தண்டனையும், ரூ. 1,000 அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் மேலும் 4 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

# பிரான்சின் மண்ணாசை வெறி!

## புதுடில்லியில் கவலை

புதுடில்லி, மார்ச் 5—

இந்தியாவிலுள்ள தனது முன்னாள் ஆதிக்கப் பகுதிகளான காரைக்கால், பாண்டிச்சேரி, மாகி, ஏனாம் ஆகியவை குறித்து இந்திய சர்க்காருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கில்லை என்று அண்மையில் திடீரென்று பிரெஞ்சு சர்க்கார் மேற்கொண்ட முடிவு புதுடில்லி வட்டாரத்தவருக்குக் கவலையை உண்டுபண்ணியிருக்கிறதாம்!

எகிப்து, அல்ஜீரியப் பகுதிகளில் பிரான்சின் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியா தனது கண்டனத்தை வெளியிட்ட போக்கில், பிரெஞ்சிலுள்ள சில குறிப்பிட்ட அரசியல் வட்டாரங்களுக்கு ஏற்பட்ட கோபத்தின் எதிரொலியே இந்த முடிவு என்றும், இனிமேல் காஷ்மீர் பிரச்சினையிலும் இந்தியாவுக்கு எதிராக இதுபோன்ற செய்கைகள் எதிரொலிக்கப்போகின்றன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

"பிரெஞ்சுப் பிடியில் இருக்கும் பகுதிகளையெல்லாம் இந்தியாவிடம் தந்துவிடுவதென கடந்த ஆண்டில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுவதற்கு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு முயற்சியும் நல்ல பலனைத்தராது; இந்தியா—பிரான்சு நல்லுறவுக்குப் பங்கம் விளைவிக்கும்,"

என்று, முன்னாள் பாண்டிச்சேரி பிரதிநிதித்துவச் சபையின் தலைவரான ஆர். எல். புருஷோத்தம ரெட்டியார் எச்சரிக்கைக் குறிப்பொன்று விடுத்துள்ளார்.

# தேர்தல் நிதி

★

## சென்னை—பார்க் டவுன் ஓட்டல் தொழிலாளர்கள்

24—2—57 அன்று சென்னை பார்க் டவுன் மன்னார் தெருவில், ஓட்டல் தொழிலாளர் சார்பில் தி. மு. கழக தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், பி. ஆர். கோகுலகிருட்டிணன், க. இரகுநாதன், ந. செயராமன், சே. கோவிந்தசாமி ஆகியோர் பேசினர். ஓட்டல் தொழிலாளர் அமைப்புக் குழு கன்வீனர் தோழர் அனந்தராமன் தி. மு. க. தேர்தல் நிதிக்கு ரூ. 150 அளித்தார்.

### தாம்பரம் தி. மு. கழகம்

தாம்பரம் தி. மு. கழகச் சார்பில் தேர்தல் நிதிக்கு ரூ. 60 தோழர் செ. அன்பரசன் மூலம் அளிக்கப்பட்டது.

### ஆலந்தூர் தி. மு. கழகம்

சென்னை—ஆலந்தூர் தி. மு. கழகச் சார்பில் தேர்தல் நிதிக்கு ரூ. 41 அளிக்கப்பட்டது.

★★★★★★★★★★★★★★★★★★

'வாழ்வே மாயம்' என்ற மூட நம்பிக்கைகளைமுறியடிக்க உழைக்கும்

**தி. மு. க.**

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற தன்னம்பிக்கையூட்டிய

**தி. மு. க.**

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★★

# சென்னை நகரில் நாளை வாக்குப்பதிவு

## நாளை மறுதினம் வாக்குகள் எண்ணப்படும்

சென்னை, மார்ச் 7—

சென்னை நகரத் தொகுதிகளில் நாளை காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரையிலும் வாக்குப் பதிவு நடைபெற இருக்கிறது.

வடசென்னைத் தொகுதிகளில் **4,49,968** பேரும் தென் சென்னைத் தொகுதிகளில் **4,72,017** பேரும், ஆகமொத்தம் சென்னை நகரில் **9,21,985** வாக்காளர்கள் இருக்கின்றனர்.

குறைந்தது **600** முதல் **1,200** வாக்காளர்வரை தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யும் வசதிகள் கொண்ட மொத்தம் **1,073** வாக்குப் பதிவு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

### எண்ணிக்கை

நாளை மறுதினம் மாலை 3-மணிக்கு, முதன் முதலாக வி. பி. மண்டபத்தில் சென்னை தெற்கு பாராளுமன்றத் தொகுதி வாக்குகள் எண்ணப்படும் என்றும், அதனை ஒட்டி, பாராளுமன்றத் தொகுதியிலடங்கிய சட்டசபைத் தொகுதிகளில் வாக்குகள் எண்ணப்படும் என்றும் தெரிகிறது.

இந்த வாக்குகளை எண்ணுவதற்கென சுமார் 200 பேர் நியமிக்கப்பட்டிருக்கின்றனராம்.

வட சென்னை பாராளுமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கை மார்ச் 12-ந்தேதி, செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிகிறது.

அம்முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர், வடசென்னை சட்டசபைத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று தெரிகிறது.

# தமிழகத் தேர்தல் முடிவுகள்

## கழக அபேட்சகர்கள் பெற்ற ஓட்டு விபரங்கள்

மார்ச் 1-ந் தேதி நடைபெற்ற தேர்தல் முடிவுகள் சில தொகுதிகளிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கின்றன:—

அரியலூர் தொகுதியில் போட்டியிட்ட நமது கழக அபேட்சகர் தோழர் நாராயணன் அவர்கள் 10,404 வாக்குகள் பெற்றுள்ளார். அவரை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகரான எஸ். இராமலிங்க படையாச்சி என்பவர் 1,340 வாக்குகள் மட்டுமே அதிகமாகப் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

அடுத்து வ. ஆ. மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட அமைச்சர் பக்தவத்சலம் நமது கழக அபேட்சகர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களைவிட 4,734 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நமது கழக அபேட்சகருக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 17,050.

பெருந்துறை தொகுதியில் கம்யூனிஸ்டு சார்பில் போட்டியிட்ட தோழர் என். கே. பழனிசாமி அவர்கள், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் மாணிக்கம் அவர்களைவிட 7,095 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திருக்கோட்டியூர் தொகுதியில் தோழர் கண்ணதாசன் அவர்கள் தோல்வி அடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மற்றும் கோபிசெட்டிப்பாளையம், கோவில்பட்டி, கன்னியாகுமரி தொகுதிகளிலும் தி. மு. கழக அபேட்சகர்களை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சாத்தான்குளம் தொகுதியில் தோழர் எஸ். பி. ஆதித்தன் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 10,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

கடையம் தொகுதியில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகர் டி. எஸ். ஆதிமூலம் அவர்கள், காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 9,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

சாத்தூர் தொகுதியில், காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியின் சார்பில் போட்டியிட்ட திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் அவர்களைவிட 4,717 வாக்குகளை மட்டும் அதிகம் பெற்று முதலமைச்சர் காமராசர் வெற்றி பெற்றிருக்கிறார்.

அருப்புக்கோட்டை தொகுதியில் போட்டியிட்ட கா. சீ. கமிட்டி அபேட்சகர் இராமசாமி அவர்கள் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 6,000 வாக்குகள் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

கிருஷ்ணகிரி தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றுள்ளதாக இறுதியாகவெளி வந்த தகவல் மூலம் தெரிகிறது.

# கோவையில்:

## தேர்தல் கூட்டங்கள்

**7-3-57 இரவு 7 மணிமுதல் 12 வரை**

15-வது வட்டாரம்—வள்ளுவர் மன்றம்; 20/33, பல்ஜிவார் சந்து; 29-வது வார்டு அழகிரி படிப்பகம்; 14-வது வட்டாரம் தெப்பக்குளம் என் 3; 17-வது வட்டாரம் சௌடம்மன்கோயில் மைதானம்.

8—3—57

(தோழர்கள் டி. கே. சீனிவாசன்—காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்வர்)

29-வது வட்டம்—பிள்ளையார் கோயில் மைதானம்; 12-வது வட்டம்—கே. வி. கே. சாமி படிப்பகம்; 14-வது வட்டம்—தெப்பக் குளம் மைதானம்; 10-வது வட்டம்—மாடர்ன் லாட்ஜ் மைதானம்; 19-வது வட்டம்—வின்சென்ட்ரோடு; 26-வது வட்டம்—கார்திச் சவுக்; 27-வது வட்டம்—ஆசீஸ் பேட்டை; 9-வது வட்டம்—முனிசிபல் டிஸ்பென்சரி மைதானம்.

9—3—57

(தோழர்கள் ஈ. வே. கி. சம்பத்—கே. ஏ. மதியழகன் ஆகியோர் கலந்துகொள்வர்)

13-வது வட்டம் பரியல் மைதானம்; 14-வது வட்டம்—தெப்பக் குளம் மைதானம்; 11-வது வட்டம் — வெங்கிடசாமிப்பிள்ளை ஆரம்பப்பள்ளி மைதானம்; 20-வது வட்டம்—மாகாளியம்மன் கோயில் மைதானம்; 11-வது வட்டம் லேட் அவுஸ் மைதானம்; 18-வது வட்டம்—மாரியம்மன் கோயில் மைதானம்.

# இயந்திர இருதயம்!

மாஸ்கோ, மார்ச் 6—

ரஷ்ய விஞ்ஞானிகள் செயற்கை இருதயம் ஒன்றைக் கண்டுபிடித்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

சாதாரண இருதயத்தின் வேலையை இந்தச் செயற்கை இருதயம் சிறிது நேரம்வரையில் செய்யுமாதலால், இருதய இரண சிகிச்சை செய்வது சுலபமாகிறது எனக் கூறப்பட்டிருக்கிறது.

# கோவை நகரில் மாபெரும் ஊர்வலம், பொதுக்கூட்டம்

கோவை, மார்ச் 6—

கோவை நகரத்தில் கடந்த 3-ந் தேதியன்று மாலை 3 மணிக்கு கோவை நகரக் கழகக் கட்டிடத்திலிருந்து ஒரு மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரம் முழுமையிலும் வலம் வந்தது.

இந்த ஊர்வலத்தில் 1,500-க்கு அதிகமான சைக்கிள்களில் கழகத் தோழர்களும் மற்றும் ஏராளமான தொண்டர்களும் பொது மக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஊர்வலம், தோழர் வே. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

அன்று மாலை, காந்தி பார்க் மைதானத்தில் தோழர் ஜானகிராம் தலைமையில் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரா. செழியன், சி. டி. தண்டபாணி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். (ந. - நி.)

# பிரிட்டிஷ் இராணியிடம் மன்னிப்பு கோருகிறார் நேரு பண்டிதர்!

புதுடில்லி, மார்ச் 6—

அண்மையில், இங்கிலாந்தின் இராணி எலிசபெத், போர்ச்சுகலுக்கு வருகை தந்த நிகழ்ச்சி குறித்து அ. இ. கா. கமிட்டி சார்பில் வெளியிடப்படும் 'எகானமிக் ரெவியூ' மார்ச் 1-ந் தேதிய இதழில் மிக வன்மையான கண்டனக் குறிப்பொன்று காணப்பட்டது குறித்து இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் இங்கிலாந்து மகாராணியின் மன்னிப்பைக் கோரியிருக்கிறாராம்!

இங்கிலாந்து மகாராணியின் இந்த வருகை குறித்து அவ்விதழின் தலையங்கத்தில் 'நெருங்கிக்கொண்டிருக்கும் அழிவு காலத்தின் இறுதிப் பகுதியில் ஒரே இனத்தைச் சேர்ந்த பறவைகள் எல்லாம் ஒன்றுகூடுகின்றன,' என்று குறிப்பொன்று காணப்பட்டதாம்!

இந்தக் குறிப்பினைக் கண்ட நேரு பண்டிதர் தாம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறுவதாவது:—

" 'எகானமிக் ரெவியூ' இதழின் தலையங்கப் பகுதியைப் பார்வையிட்டபோது, அதில், பிரிட்டிஷ் இராணியின் போர்ச்சுகல் வருகை குறித்து இழிவான முறையில் எழுதப்பட்டிருப்பது குறித்து நான் மிகமிக வேதனைப்படுகிறேன். உடனடியாக நான் மேற்கொண்ட விசாரணையின் போது, அவ்விதழின் தலைமை ஆசிரியரான ஸ்ரீமந்நாராயணன் (அ. இ. கா. க. செயலாளர்களுள் ஒருவர்) அங்கில்லை என்பதும், அவர் தமது சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவருக்குத் தெரியாமல் இது பிரசுரமாகியிருப்பதும் தெரியவந்தது. அனாவசியமாக மகாராணி அவர்களின் பெயர் இங்கு இழுக்கப்பட்டிருக்கிறது கண்டு வேதனையடைகிறேன்; அவர்களுடைய மன்னிப்பைக் கோருகிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு இங்குவந்த ஸ்ரீமந்நாராயணன் ஒரு அறிக்கையில், 'நான் இல்லாதபோது, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல், திரு. எச். டி. மாளவியா அவர்கள் 'தரக் குறைவான' வார்த்தைகளை உபயோகித்து வெளியிட்டிருக்கும் குறிப்பினைக் காண வருந்துவதுடன், மகாராணி அவர்களுக்கு எனது வருத்தத்தை அறிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# 'இருளுக்குப்பின் ஒளி பரவுகிறது'

## சுதந்திர கானா மக்களுக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்து!

புதுடில்லி, மார்ச் 6—

"சுதந்திர கானாவில் உதயமாகியிருக்கும் சுதந்திர ஒளி, ஆப்பிரிக்காவில் இன்னும் அடிமைப்பட்டு இருள் சூழ்ந்துகிடக்கும் மற்றப் பகுதிகளிலும் சுடர்விட்டுப் பரவும் என்று நான் நம்புகிறேன்"

என்று நேரு பண்டிதர், தங்கள் நாடு சுதந்திர நாடாக மலர்ந்தது குறித்து இந்தியாவில் இருக்கும் சுதந்திர கானாவைச் சேர்ந்த ஆப்பிரிக்க மாணவர் சங்கத்தவர் ஏற்பாடுசெய்திருந்த கானாசுதந்திர விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"ஆப்பிரிக்காவின் பல பகுதிகளிலும் இருண்ட நிழல் படிந்து கிடக்கிறது; அப்பகுதிகளையெல்லாம் இருளிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதில், சுதந்திர கானாவில் தோன்றியுள்ள சுதந்திர ஒளி உதவும் என்று நம்புவதுடன், இதற்காகப் பாடுபட்டவர்களுக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று, அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

# திருச்சி தி. மு. கழகத் தோழர்கட்கு:

"9—3—57 காலை 8 மணியளவில் குளித்தலை தொகுதி தி. மு. கழக அபேட்சகர் மு. கருணாநிதி அவர்களை ஆதரித்து திருச்சி டவுன் ஹாலிலிருந்து ஓர் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு குளித்தலை போய்ச் சேரும். இவ்வூர்வலத்தில் மாவட்டக் கழகத் தோழர்கள் அனைவரும் சைக்கிள் வண்டிகளுடனும் கழகக் கொடிகளுடனும் வந்து கலந்துகொள்ள வேண்டுகிறேன்"

என்று, திருச்சி மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ராபி அறிவிக்கிறார்.

# ஜனநாயகம் சரிவர நடைபெற எதிர்க்கட்சி நிச்சயம் வேண்டும்

## கிருபளானி மீண்டும் வற்புறுத்துகிறார்

சென்னை, மார்ச் 6—

"ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் செய்யவேண்டிய இரண்டு உருப்படியான காரியங்கள் என்னவென்றால், ஒன்று, ஒரு சர்க்காரைத் தேர்ந்தெடுப்பது; மற்றொன்று, அதே நேரத்தில், ஆளுவோரைக் கண்காணிக்கிற ஒரு எதிர்க் கட்சியையும் தேர்ந்தெடுப்பது.

"ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நம்மை யார் ஆளுவது என்பதை நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்; அதற்கான வாய்ப்புத்தான் தேர்தல்! அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆட்சியைக் கண்காணிக்க ஒரு எதிர்க் கட்சியும் இருந்தாக வேண்டும்; அப்போதுதான், ஜனநாயகம் நேரிய வழியில் நடக்க முடியும்.

"சர்வாதிகாரம் என்பது ஒரு தனி மனிதன் ஆட்சியை மட்டும் குறிப்பதல்ல. ஒரு கட்சி ஆட்சி அமைந்து அதற்கு வலுவுள்ள எதிர்க் கட்சி இல்லாவிட்டாலும், அந்த ஆட்சி சர்வாதிகார ஆட்சி என்றே கருதப்படும்"

என்று ஆச்சாரிய கிருபளானி, சென்னைத் தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"காந்தியார், மந்திரிகள் எல்லாம் எளிய வாழ்வு நடத்தவேண்டும் என்றும், எவரும் 500-ரூபாய்க்குமேல் சம்பளம் பெறக்கூடாது என்றும் கூறியிருந்தார்; ஆனால், இன்று காங்கிரஸ் மந்திரிகள் ரூ. 1,500 சம்பளம் வாங்குகின்றனர்.

"அந்த நாட்களில் கவர்னர்கள் ஆளுபவர்களாக இருந்தார்கள்; ஆனால் இன்று, கவர்னர்கள் வெறும் அலங்காரப் பதுமைகளாகத்தான் இருக்கின்றனர் ஆட்சிப் பொறுப்பு அவர்களுக்கு இல்லை; என்றாலும் கவர்னர்கள், முன்புபோலவே சம்பளம் வாங்கி வருகின்றனர்; இது கூடாது."

# உண்மையாகவா?

சென்னை, மார்ச் 5—

உடனடியாகத் தொழிற் கல்வியை வளம் பெறச் செய்வதற்காக தென்னாட்டில் மூன்று பொறி இயல் கல்லூரிகளை அனைத்திந்திய தொழிற் கல்விக் குழு தேர்ந்தெடுத்துள்ளது. அவற்றில் சென்னையிலுள்ள கிண்டி பொறி இயல் கல்லூரியும் ஒன்றாகும்.

# டிபாசிட் இழந்ததால் ரூ.28750கிடைத்ததாம்

லக்னோ, மார்ச் 6—

உத்திரப் பிரதேச மாநிலத் தேர்தல்களில் ஈடுபட்டு வெற்றி பெறாமல் டிபாசிட் தொகை இழந்தவர்கள் 115 பேர் என்றும், இவர்கள் இழந்த தொகை ரூ. 28,750 என்றும் தெரிகிறது.

இதுவரையிலும் அறிவிக்கப்பட்ட 78 தொகுதி முடிவுகளிலிருந்து இவ்விவரம் தரப்பட்டிருக்கிறது.

போட்டியிட்ட 16 கம்யூனிஸ்டுகளில் 11 பேர் தங்கள் டெபாசிட்டுகளை இழந்ததும் இவ்விவரத்தில் அடங்கியிருக்கிறது.

மற்றும் 114 சுயேச்சைகளில் 72 பேரும், 37 ஜனசங்கத்தவரில் 17 பேரும், 36 பி. சோ.-க்களில் 12 பேரும், மற்றும் 3 சாம்ராஜ்ய பரிஷத்துகளும் தங்கள் டெபாசிட்டுகளை இழந்திருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.